

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.8.2023) சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற 7வது "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை 2023 சென்னை இறுதிப் போட்டியில் இந்தியா மலேசியா நாடுகளுக்கிடையேயான ஹாக்கி போட்டியை தொடங்கி வைத்து, போட்டியினை பார்வையிட்டார். உடன் ஒன்றிய தகவல் மற்றும் ஒளிபரப்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் முகமது தயப் இக்ராம், ஹாக்கி இந்தியா தலைவர் டாக்டர் திலீப் திர்கி, சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் துணைத் தலைவர் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த், ஆகியோர் உள்ளனர்.

### ஆசிய ஆடவர் ஆக்கி கோப்பையை வென்ற

# இந்திய அணிக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.1.10 கோடி பரிசு!

## கோப்பையை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 14 -

"ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை - 2023 சென்னை" பரிசளிப்பு விழாவில் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு வெற்றிக் கோப்பையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்தினார். தொடர்ந்து ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பையை வென்ற இந்திய அணிக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.1.10 கோடி பரிசுத் தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.8.2023) சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற 7வது "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை - 2023 சென்னை" பரிசளிப்பு விழாவில், ஒன்றிய தகவல் மற்றும் ஒளிபரப்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் அவர்கள் முன்னிலையில் ஆசிய ஆடவர் ஹாக்கி இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு கோப்பையை வழங்கி, இந்திய அணி வீரர்களுக்கு தங்கப் பதக்கங்களை அணிவித்து, வாழ்த்தினார். மேலும், வெற்றி பெற்ற இந்திய அணி வீரர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் தலா 5 இலட்சம் ரூபாயும், பயிற்சியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், என மொத்தம் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

7வது "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை - 2023 சென்னை" போட்டி ஆகஸ்ட் 3 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை சென்னை, மேயர் இராதா கிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் நடைபெற்றது. ஹாக்கி இந்தியாவுடன் இணைந்து தமிழ்நாடு அரசு நடத்திய இப்போட்டியில், இந்தியா, சீனா, பாகிஸ்தான், மலேசியா, ஜப்பான், மற்றும் கொரியா ஆகிய 6 நாடுகள் பங்கேற்றன.

16 ஆண்டுகளுக்குப் பிறகு இப்புகழ்பெற்ற ஹாக்கிப் போட்டி சென்னையில் மீண்டும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அளவிலான இப்போட்டியினை சிறப்பாக நடத்துகின்ற வகையில், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஹாக்கி விளையாட்டரங்கம் (Upgraded Hockey Stadium), ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் (Olympic Standard New Synthetic Turf) மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் (Kalaignar Centenary Pavilion) ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28.7.2023 அன்று திறந்து வைத்தார்.

சென்னை மெரினா கடற்கரையில் 20.7.2023 அன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை - 2023 சென்னை" போட்டிக்கான கோப்பையை அறிமுகம் செய்து வைத்து, "பொம்மன்" இலச்சினையை வெளியிட்டார். மேலும், ஆசிய ஹாக்கி கோப்பையினை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லும் "பாஸ் தி பால்" கோப்பை (PASS THE BALL TROPHY TOUR) சுற்றுப்பயணத்தையும் தொடங்கி வைத்தார்.

"பாஸ் தி பால் - கோப்பை" சுற்றுப்பயணம் கன்னியாகுமரியில் இருந்து தொடங்கி ஒவ்வொரு மாவட்டமாக சென்று 1.8.2023 அன்று சென்னை வந்தடைந்தது. இந்த கோப்பையை சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் முகமது தயப் இக்ராம் அவர்கள் 2.8.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

அதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்றைய தினம் சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில், நடைபெற்ற "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை சென்னை 2023" இறுதிப் போட்டியில் இந்தியா - மலேசியா நாடுகளுக்கிடையேயான ஹாக்கி போட்டியை தொடங்கி வைத்து, இரு அணிகளின் தலைவர்கள், வீரர்கள் மற்றும் நடுவர்களை வாழ்த்தி, போட்டியினை பார்வையிட்டார்.

பின்னர், "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை - 2023" இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று முதலிடம் பெற்ற இந்திய அணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வெற்றிக் கோப்பையை வழங்கி, இந்திய அணி வீரர்களுக்கு தங்கப் பதக்கங்களை அணிவித்து வாழ்த்தினார்.

இந்த விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் முகமது தயப் இக்ராம், ஹாக்கி இந்தியா தலைவர் டாக்டர் திலீப் திர்கி, பொதுச் செயலாளர் போலா நாத் சிங், பொருளாளர் சேகர்

ஜெ. மனோகரன், செயல் இயக்குநர் காமாண்டர் ஆர். கே. ஸ்ரீவஸ்தவா, ஆசிய ஹாக்கி சம்மேளனத்தின் நிர்வாகி தைமூர், சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் துணைத் தலைவர் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விடுதலை திருநாள் விழா!

## 15.8.2023 அன்று சரியாக காலை 8 மணிக்கு

## அண்ணா அறிவாலயத்தில் தேசியக் கொடி ஏற்றப்படுகிறது!

### தலைமைக் கழகம் அறிவிப்பு

வருகிற 15.08.2023 - செவ்வாய்க்கிழமை இந்திய நாட்டின் விடுதலை திருநாளினையொட்டி, கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் தி.மு.க. தலைமைக் கழகமான அண்ணா அறிவாலயத்தில் காலை சரியாக 8.00 மணிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தேசியக் கொடி ஏற்றி வைக்கிறார்.

சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை கிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**நாள் : 13.8.2023**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**



முதலமைச்சர் – கழகத்தலைவர் அவர்களின் ஆணைப்படி வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கழக மூத்த முன்னோடிகளை நேரில் சந்திக்கும் நிகழ்வில் கழக மூத்த முன்னோடி முன்னாள் எம்.எல்.ஏ. மற்றும் முன்னாள் மாவட்டச் செயலாளர் ஆர்.சின்னசாமியை நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தி கலந்துரையாடினார். உடன் தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், நகரச் செயலாளர் நாட்டான் மாது மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### 'நீட்' விலக்கு மசோதாவில் எந்தக் காலத்திலும் கையெழுத்திட மாட்டேன்!

# தமிழ்நாட்டின் மாணவர்களுக்கு ஆளுநர் துரோகம்!

சென்னை, ஆக. 14 -

'நீட்' விலக்கு மசோதாவுக்கு ஒருபோதும் அனுமதி அளிக்கும் வகையில் கையெழுத்திட மாட்டேன் என்று ஆளுநர் ஆர்.என்.ரவி ஆணவத்துடன் தெரிவித்துள்ளார்

இந்தியாவில் மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு ஒரே பொது நுழைவுத்தேர்வு நடைமுறையில் உள்ளது. இதற்கு 'நீட்' தேர்வு என்று பெயர். இந்த தேர்வு முறை நடைமுறைப்படுத்தப்பட்டதால் சாதாரண ஏழை எளிய மாணவர்களும் மருத்துவக் கல்லூரியில் எளிதில் சேர முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக பல்வேறு தரப்பினரும் குற்றம்சாட்டி வருகின்றனர்.

'நீட்' தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து சில மாணவ-மாணவிகள் அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதனால் தமிழ்நாட்டில் எதிர்ப்பலையும் கிளம்பியது. ஆகவே 'நீட்' தேர்வை ரத்து செய்ய வேண்டுமென தமிழ்நாட்டில் உரத்த குரல் உள்ளது.

'நீட்' தேர்வானது முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சி காலத்திலும் தமிழ்நாட்டிற்கு அறிமுகம் செய்யப்படவில்லை. ஜெயலலிதா ஆட்சியிலும் 'நீட்' தேர்வு இங்கு அறிமுகமாகவில்லை. பா.ஜ.க.விற்கு அடிமையாகச் செயல்பட்ட எடப்பாடி பழனிச்சாமி ஆட்சிக்காலத்தில் தான் 'நீட்' தேர்வு அறிமுகமாகி தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கனவுக்கு உலை வைத்தது.

அதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் 'நீட்' தேர்வு தொடர்பாக மாணவ-மாணவியரின் துயரம் கண்டு அதை எப்படியாவது முறைப்படி ரத்து செய்ய வேண்டும் என்று முடிவு செய்து நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் குழு ஒன்றை அமைத்து அதன் பரிந்துரைகளை ஏற்று, சட்டப் பேரவையில் 'நீட்' விலக்கு மசோதாவை நிறைவேற்றி, மாநில ஆளுநருக்கு அனுப்பி வைத்தார்.

ஆனால் ஆளுநர் ஆர். என்.ரவி அவர்களோ, அதற்கு ஒப்புதல் அளிக்காமல் இருந்து வருவதுடன், தற்போது அனுமதி தர மாட்டேன் என்று ஆணவத்துடன் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ-மாணவியரை 50 ஆண்டு காலத்திற்கு பின்னோக்கி செல்ல வைத்துள்ளார்.

இந்த தேர்வு முறையை ரத்து செய்ய வேண்டுமென கேட்டு தமிழ்நாடு சட்டசபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது கவர்னருக்கும் அனுப்பி வைக்கப்பட்ட நிலை ஒன்றிய அரசுக்கும் தமிழ்நாடு அரசு சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனாலும் 'நீட்' தேர்வு ரத்து செய்யப்படவில்லை.

இப்படிப்பட்ட நிலையில் கடந்த ஆண்டு நீட் தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவியுடன் ஆளுநர் ஆர்.என்.ரவி நேற்று கலந்துரையாடினார். அப்போது சேலத்தைச்சேர்ந்த ஒரு மாணவியின் தந்தை அம்மாசியப்பன் ராமசாமி ஆளுநரிடம் 'நீட்' தேர்வுக்கு எதிரான மசோதாவுக்கு எப்போது அனுமதி அளிப்பீர்கள் என்று கேள்வி கேட்டார்.

அதற்கு ஆளுநர் ஆர். என்.ரவி பதில் அளித்து பேசியதாவது:-

தமிழ்நாட்டில் 'நீட்' தேர்வு தொடர்பாக சரியான புரிதல் இல்லை. அதனால் எதிர்க்கின்றார்கள். கடந்த ஒரு வருடத்தில் 'நீட்' தேர்வு தொடர்பாக தற்கொலைகள் எதுவும் நடந்ததாக கேள்விப்படவில்லை. ஆனால் அதற்கு முன்னர் எந்த மாணவர் இறந்தாலும் 'நீட்' தேர்வு தான் காரணம் என தவறான பிரசாரத்தில் ஈடுபட்டார்கள்.

'நீட்' தேர்வை ரத்து செய்தால் மாணவர்களின் போட்டித்திறன் குறைந்துவிடும்; மழுங்கடிக்கப்படும். 'நீட்' தேர்வு வந்தபிறகு ஏழை எளிய அரசுப் பள்ளி மாணவ-மாணவிகளுக்கு மருத்துவப் படிப்பு கிடைக்க வழிவகை ஏற்பட்டுள்ளது.

ஆகவே 'நீட்' விலக்கு தொடர்பாக தமிழ்நாடு அரசு அனுப்பிய தீர்மானத்தில் ஒரு போதும் கையெழுத்திடமாட்டேன். அதற்கு அனுமதி தரமாட்டேன்.

இவ்வாறு ஆளுநர் ஆர். என்.ரவி பேசியுள்ளார்.

### பெற்றோர் ஒருவரின் ஆதங்கம்!

ஆளுநர் ஆர்.என்.ரவியின் ஆணவப் பதிலையடுத்து வெளியே வந்து தமிழ்நாட்டு பெற்றோர்களின் பிரதிநிதியாக அம்மாசையப்பன் ராமசாமி என்பவர் அளித்துள்ள விளக்கமே ஆளுநரின் இந்த ஆணவக் கருத்து எந்த அளவிற்கு தவறானது என்று வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது.

அவரது விளக்கம் வருமாறு :

"என் பெயர் அம்மாசையப்பன் ராமசாமி. நான் ஸ்டைல் சேலம் ஸ்டீல் பிளான்டில் பணியாற்றுகிறேன். என் பாப்பா (மகள்) நீட் தேர்வில் ஸ்டேட் ரேங்கில் 878வது இடத்தில் இருக்கிறாள். 623 மார்க் வாங்கிருக்காங்க. பர்ஸ்ட் டைம் இப்பதான் தேர்வு எழுதியிருக்கிறாங்க. நீட் அச்சீவர் ஆகி விட்டதால் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் நேற்று அவங்களுடைய சேர்க்கை முடிந்து, அட்மிஷன் பண்ணிட்டு தான் வந்திருக்கிறேன். அதாவது கடந்த 5 வருஷமா 6 வருஷமா நாம நீட் தேர்வு வேண்டாம் என்று தமிழ்நாடு முழுவதும் சொல்கிறோம்.

ஆனால், அதில் நாம் எப்படி அப்ரோச் பண்றதுன்னு தெரியாம தான் நம்ம ஸ்டூடண்ட்ஸ் பாஸ் செய்வதில் திணறிக்கொண்டு இருந்தார்கள். இன்னைக்கும் நமது பள்ளிகள் அங்கு மாணவர்கள் படிக்கும் சப்ஜெக்டை வைத்து நீட் தேர்வில் அவர்களை பாஸ் பண்ண வைக்கவே இல்லை. அதற்குப் பின்னால் ஒரு சதி இருக்கிறது. அதற்கு பின்னால் ஒவ்வொரு ஸ்கூலும் ஆரக்கில், பைஜூஸ் ஒவ்வொரு இன்ஸ்டிடியூஷனா உள்ள வெச்சு பிரிப்பேர் செய்கிறார்கள். அப்படி படித்து, வீட்லயும் எக்ஸ்ட்ராவா பசங்கள் படித்துத் தான் பாஸ் பண்ண முடியும். அப்படி செய்துதான் பாஸ் பண்ண முடிகிறது. ஏனென்றால் என்ன சப்ஜெக்ட் எப்படி வரும் என்று தெரியாமல்தான் எங்கள் பசங்கள் 5, 6 வருஷமாக கஷ்டப்பட்டுக்கிட்டு இருந்தாங்க.

இதுவரை 15 குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். ஆனாலும், இந்த வருஷம் டாப்பர் 720 மார்க்ஸ் நம்ம பசங்கள்தான் வாங்கி இருக்கிறார்கள். பிரபஞ்சன் வாங்கி இருக்கிறான். இன்னொரு பையனும் வாங்கி இருக்காங்க. என்னோட மகள்செட்தான். என்னோட மகள் சைதன்யா ஸ்கூலில் தான் படித்தார்கள். அந்த ஸ்கூலில் படித்த 35 பேர் பாஸ்பண்ணி இருக்கிறார்கள். அதெளக்கு அவங்க நெறைய ஹெல்ப் செய்கிறார்கள். ஆனால், இவ்வளவு கஷ்டப்பட்டு நமது குழந்தைகள் படிக்க வேண்டுமா..? ஒரு பையன் 15 மணி நேரம் படித்ததாக சொல்கிறார்.

ஒரு பிளஸ் டூ படிக்கிற பையன் விளையாட்டு குழந்தை தான் அவன். அந்த குழந்தை வந்து 15 மணி நேரம் படிச்சு தான் அந்த நீட் தேர்வில் பாஸ் பண்ணணுமா..? கடந்த 70 வருஷமா 1965 ல ஆரம்பிச்சது செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி. அவ்வளவு இன்ஃப்ராஸ்ட்ரக்சர் இருக்கிறது. நல்ல தரமாக வைத்திருக்கிறார்கள். இந்தியாவில் டாப் 5 என்ற நிலையில் இருக்கிறது. அங்க உள்ள வாத்தியார்கள், அவங்களுக்கு சொல்லிக் கொடுத்தவர்கள் எல்லாம் எந்த நீட்டைப் படித்தார்கள்...?

என்னோட மகள் ஜெயித்து விட்டாள். அதே மாதிரி 100 பேர் ஜெயித்தவர்களை வைத்து பேசறாங்க. ஒவ்வொரு பெற்றோரும் எவ்வளவு செலவு பண்ணினார்கள், அதை யாருக்கு பண்ணினார்கள் என்று கேளுங்கள்..? பள்ளிக்கூடத்துக்கு பண்ணினார்களா...? அரசு பள்ளிக்கூடத்தில் 652 பேர் சேர்ந்துட்டதாக ஆளுநர் செல்கிறார்கள். எதனால் அவர்கள் சேர்ந்தார்கள்...? 7.5 சதவிகிதம் என்ற அந்த இட ஒதுக்கீடு கிடைத்ததால் மட்டுமே அவர்கள் சேர்ந்தார்களே தவிர, நீட் காரணமாக அவர்கள் சேர முடியவில்லை.

இந்த ஆதங்கம் பெற்றோர்களிடம் இருக்கிறது. அதனால் தான் நான் ஒரு தனி மனிதனாக, ஒரு பெற்றோராக மேதகு ஆளுநர் அவர்களிடம் நேரடியாக சந்தித்து கேக்கறதுக்கு வாய்ப்பு கிடைக்காது. ஆனால், இன்னைக்கு என்னோட மகள் அச்சீவ் பண்ணியதால் இங்கு வரும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி நான் அவரிடம் கேட்டேன். எப்பொழுது நீங்கள் நீட் தேர்வை ரத்து செய்து கையெழுத்து போட்டு தருவீர்கள் என்று கேட்டேன். அவ்வளவுதான் கேட்டேன். அவர் அதற்கு முடியவே முடியாது என்று சொல்லி விட்டார்.

அதை ஆளுநர் சொல்கிறார். ஆனால், அரசாங்கம் இருக்கிறது. அரசாங்கத்தை நாங்கள் நம்புகிறோம். எல்லா கட்சிகளும் வேண்டாம் என்று சொல்லும் நீட் தேர்வை ஆளுநர் வேண்டும் என்று சொல்கிறார். நான் ரத்து செய்து கையெழுத்து போட மாட்டேன் என்று சொல்கிறார். அவரது எல்லைக்குள் நான் இப்போது இருக்கிறேன். அதனால் இப்போது நான் சொல்லுவது உங்கள் மூலமாக வெளியில் போகட்டும். நீட் பாஸ் பண்ண முடியாது என்பதற்காக நம் பசங்களுக்காக நான் பேச வரவில்லை. 555 மார்க், 545 மார்க் எடுத்த பசங்கள் நீட் எக்ஸாமுக்கு போகமுடியவில்லை. (செய்தியாளர் நீட்டுக்காக எவ்வளவு செலவு செய்தீர்கள் பற்றி கேட்டபோது வருஷத்துக்கு 4 லட்சம் செலவு பண்ணுகிறேன். 9, 10, 11, 12 வகுப்புகள் என்று ரூ.20 லட்சம் செலவு செய்யும் அளவுக்கு நான் பணியாற்றி சம்பளம் வாங்குகிறேன். அதனால் என்னால் முடிகிறது. இதை மற்ற ஸ்டுடண்ட்ஸ் பெற்றோர் செய்ய முடியுமா என்று செய்தியாளரிடம் கேட்கிறார்)

நீட் கோச்சிங் என்று யாரும் போவதில்லை. எல்லாம் ஸ்கூலிலேயே முடித்துக் கொள்கிறார்கள். நாங்கள் நீட் கோச்சிங் இல்லாமல்தான் பாஸ் பண்ணி இருக்கிறோம். ரொம்பவும் சந்தோஷமாக இருக்கிறது. நல்ல படிச்சு பாஸ் பண்ணும் பசங்கள் நூற்றில் ஒருவர்தான் இருப்பார். நீங்கள் எல்லா மாணவர்களையும் கவனத்தில் கொள்ளுங்கள். எலிஜிபிலிட்டி கோட்டை தாண்டி நான் வந்ததால் இங்கே நிற்கிறேன். ஆனா, அந்த கோட்டை தாண்ட முடியாமல் கீழே இருக்கும் பெற்றோர் நிலையை நினைத்துப் பாருங்கள். அந்த மனநிலையை நினைத்து பாருங்கள். அதனால்தான் நான் இங்கே பேசுகிறேன்..."

இவ்வாறு, தமிழ்நாட்டு பெற்றோர்களின் சார்பாக சேலத்தை சேர்ந்த ஒரு மாணவியின் தந்தை தனது ஆதங்கத்தை செய்தியாளர்களிடம் வெளிப்படுத்தியுள்ளார்.